DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C. C No. 9/2025 |
| Deposition of witness | : | P.W – 7 |
| Name | : | சிதம்பரம் |
| Father's /Husband Name | : | நாராயணசாமி |
| Village | : | சலிப்பேரி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 46 |
| Occupation | : | கொத்தனார் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 06th day of March, 2025.
Accused Present.

**<u>முதல் விசாரணை</u>:–**

தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய கையொப்பங்கள் மட்டும் **அ.சா.ஆ.6** மற்றும் **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசுத்தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதியளிக்கப்பட்டது)

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை :**

கடந்த 29.11.2024 ம் தேதி காலை 11.30 மணியளவில் நானும், ஸ்ரீதர் என்பவரும் ஸ்ரீவாஞ்சியம் கடைத்தெருவில் இருந்த போது நன்னிலம் ஆய்வாளர் ஆஜர் எதிரியை பிடித்து விசாரித்தார்கள் என்றும், அப்போது ஆஜர் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எங்கள் முன்னிலையில் சாட்சிகளாக வைத்து பதிவு செய்தார்கள் என்றும், அன்றைய தினம் பகல் 01.00 மணிக்கு எதிரி ஆஜர் செய்த இவ்வழக்கின் தடயத்தை எங்கள் முன்னிலையில் ஆய்வாளர் கைப்பற்றினார் என்றும், அதற்கு நானும், ஸ்ரீதரும் சாட்சிகளாக கையொப்பங்கள் செய்தோம் என்றும், போலிசார் விசாரித்தார்கள் என்றும், போலிசார் விசாரிக்க வாக்குமூலம் கொடுத்து விட்டு தற்போது ஆஜர் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.